
உ

சிவமயம்

# வைதிக அபரக்கிரியா பதார்த்த சூசிகா





அமரர்

**ப்ரம்மஸ்ரீ.கந்ததாஸ ஐயர் ஷண்முகநாதக் குருக்கள்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**08-06-2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# வைதிக அபரக் கிரியா பதார்த்த சூசிகா

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர்,
திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## ப்ரம்மஸ்ரீ.கந்ததாஸ ஐயர் ஷண்முகநாதக் குருக்கள்

## அவர்களின்

## தேகவியோக ஞாபகார்த்த வெளியீடு

**08-06-2005**

தொகுப்பு:

**வைதிக கிரியா ரத்னா**
**கௌண்டின்ய சோம. வரதராஜ சர்மா**
**கொழும்புத்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





அருமைத் தலைவராக ஆசானாக

தன்னை அர்ப்பணித்து எம்மை வளர்த்து

ஆளாக்கிய எங்கள் அன்புத்

தெய்வத்தின் திருப்பாதங்களில்

எமது கண்ணீரைக் காணிக்கையாக்கி

இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் "



தோற்றம்
22 . 01 . 1925

மறைவு
30 . 05 . 2005

அமரர்

# ப்ரம்மஸ்ரீ கந்ததாஸ ஐயர் ஷண்முகநாதக் குருக்கள்

அவர்கள்

**திதி நிர்ணய வெண்பா**

வளமான பார்த்திப ஆண்டதனில் வைகாசி ஈரெட்டில்
ஒளிகுறை பாகத்து அட்டமி திதியதனில் – களங்கமிலா
மனத்துடையான் ஷண்முகநாத சர்மனிவன் தவறாமல்
தனஞ்செயன் தாள் பற்றினனே காண்.

ப்ரம்மஸ்ரீ கந்ததாஸ ஐயர் ஷண்முகநாதக் குருக்கள் எனும் இவர் பார்த்திப ஆண்டு வைகாசி மாதம் 16ஆம் நாள் (30.05.2005) மாலை 1.25 மணியளவில், சதய நட்சத்திரமும் தேய்பிறை அட்டமியும் கூடிய வேளையில் தமது எண்பது வருட இவ்வுலக வாழ்வை நீக்கி இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரி யாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனிமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மீழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்(டு) உள்ளம்
குளிர என் கண்குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

ஆரார்வந் தாரமரர் குழாத்தி
லணியுடையா திரைநாள்
நாராயண னொடுநான்
முகனங்கி யிரவியு மிந்திரனும்
தேரார்வீதி யிற்றேவர் குழாங்க
டிசையனைத்தும் நிறைந்து
பாரார்தொல் புகழ்பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க
பூதபரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுக
சீதவள வயற் புகலி திருஞான சம்பந்தன்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

# திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுப்படி யார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் - நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச், - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்தி கனக முலை தந்தாளை.
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித் தவம் கிடந்து, முந்நூறுநாள் சுமந்தே
அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்துத், - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டு வேன்?

வட்டிலிலும், தொட்டிலிலும், மார்மேலும், தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்?

நொந்து சுமந்து பெற்று, நோவாமல் ஏந்தி முலை
தந்து, வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நான் இடுவேன்? ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல், - உருசியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு?

அள்ளிஇடுவது அரிசியோ? தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி என்றன்
மகனே! என அழைத்த வாய்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை இட்ட தீ முப்புரத்திலே;
பின்னை இட்ட தீ தென் இலங்கையிலே;
அன்னை இட்ட தீ அடி வயிற்றிலே;
யானும் இட்ட தீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்ப
லாகுதே பாவியே னையகோ ! - காகம்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை !

வெந்தாளோ சோணகிரி வித்தகா ! நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ ? சந்ததமும்
உன்னையே நோக்கி யுகத்து வரங்கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய் !

வீற்றிருந்தா ளன்னை, வீதிதனில் லிருந்தாள்
நேற்றிருந்தாள்; இன்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லாரும் வாருங்கள் ! ஏதென்றி ரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

❀❀❀❀

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலனொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர்; கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையிற் கால் நுழைத்துக் கொண்ட
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப்போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் ப்ரம்மஸ்ரீ க.சண்முகநாதக் குருக்கள்

### அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

கோவையம்பதி பெற்றெடுத்த கோமகனாம் கந்ததாஸஐயர் ஷண்முகநாதக் குருக்களின் வரலாற்றை இங்கு சுருக்கமாக வெளியிடுகிறோம்.

இவர், கோப்பாய் தெற்கு வீரபத்திரசுவாமி கோவில் ஸ்தானீக குருவான அமரர் ஐ. முத்துக்குமாரசுவாமிஐயர்-மீனாக்ஷி தம்பதியினரின் புதல்வன் கந்ததாஸஐயர் அவரது துணைவியார் நாகம்மா தம்பதியினரின் ஏக புத்திரராவார்.

**பூர்வீக வரலாறு:**

முத்துக்குமாரசுவாமி ஐயர் என்பவர் கோப்பாய் தெற்கில் பஞ்சலோகத்தினாலான வீரபத்திரர் விக்கிரகத்தினையும், கர்ப்பக்கிரகம், திருமஞ்சனக்கிணறு, அர்த்தமண்டபம் முதலானவற்றையும் கற்றளி கொண்டு அமைத்தார். ஆலய பக்தர்களின் நன்மை கருதி தெற்கு வீதியிலும் ஒரு கிணற்றை அமைத்தார். ஊர் மக்களும் அவருக்கு பேருதவியாக இருந்தனர். இவரின் மகனான கந்ததாஸஐயர் ஊர் மக்களால் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டார். பொன்னுத் துரைஐயர், கந்தசாமி ஐயர், மாந்தைஐயர் என்பன அவற்றுட்சில. இவர் பார்வை பார்த்தல் நூல் கட்டுதல் என்பவற்றில் பிரசித்தம் பெற்றவர். தன் அத்தை மகளான நாகம்மாவைத் திருமணம் செய்தார். முதலில் இவர்களுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. ஆனால் அது பிறந்த வுடனேயே மரணித்துவிட்டது. பின்னர் சுமார் பத்துவருட காலம் பிள்ளைப் பேறு இன்றி வருந்தினர். பிள்ளைவரம் கேட்டு கதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமக்கந்தனை வேண்டி அங்கு யாத்திரை சென்றனர். கதிர்காமக்கந்தன் திருவருளால் இவர்களுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு சண்முகநாதசர்மா எனப்பெயர் சூட்டினர். நீண்ட காலம் மகப்பேறின்றி இருந்ததாலும் இவருக்கு உடன் பிறந்தோர் எவருமில்லாததாலும் தாய் தந்தையர் இவரை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தனர்.

பாடசாலை செல்லும் பருவம் வந்ததும் இவர் கோப்பாய் தெற்கில் அமைந்திருந்த நாவலர் பாடசாலையில் கல்வி கற்றார். கல்வியில் சிறந்து விளங்கிய சர்மா அப்போதைய சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் முதல் தர சித்தி பெற்றார். பின்னர் சமஸ்கிருதபாலபண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார். சமஸ்கிருத குருவாக தென் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த, வடகோவையில் வசித்த, ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் என்பவர் அமையப்பெற்றார். அவரிடம் கல்விபயின்று சமஸ் கிருதத்திலும் பாண்டித்தியம் பெற்றார்.

இவருக்கு பாடசாலை ஆசிரியர் பணி கிடைத்த போதிலும் ஏக புத்திரனாக இருந்த காரணத்தினால் வீரபத்திர கோவில் பொறுப்பை ஏற்க வேண்டியதால் அதை ஏற்றுக்கொண்டார்.

ஷண்முகநாதசர்மா அவர்கள் தமது உறவுமுறை பெண்ணான துரைச்சாமிஐயர் - லலிதாம்பாள் தம்பதியினரின் புதல்வி சாந்தாதேவி என்பவரை 1943 ஆம் ஆண்டு இல்லறத்துணைவியாக ஏற்றுக் கொண்டார். இவர்களுக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. அவற்றிற்கு முறையே உமாகாந்தன், ஸ்ரீதரன், சதானந்தன் எனப்பெயரிட்டனர். இவரின் மைத்துனர் து. குருஸ்வாமி ஐயர், மைத்துனி சாரதாம்பாள் பாலசுப்பிரமணிய சர்மா ஆவர். இவர்கள் தமது பிள்ளைகளான உமாகாந்தனுக்கு வல்வை பரமேஸ்வரக் குருக்கள் தாக்ஷாயனி தம்பதியின் புத்திரி மங்கையற்கரசியையும், ஸ்ரீதரனுக்கு கொழும்புத்துறை கணேசசிவசண்முகசர்மா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌந்தராதேவி தம்பதியின் புத்திரி சசிகலாதேவியையும், சதானந்தனுக்கு கொக்குவில் இரத்தினசபாபதிக் குருக்கள் - அன்னலட்சுமி தம்பதியின் புத்திரி பத்மலோஜினியையும் திருமணம் செய்துவைத்து மகிழ்ந்தனர்.

தகப்பனார் வாழ்ந்த காலத்தில் இவர் நல்லூரில் பிரசித்தி பெற்ற கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் விசேட உற்சவங்களில் சென்று பணியாற்றிவந்தார்.

இடையில் கந்தளாய் என்னுமிடத்திலுள்ள சிவன் கோவிலின் மகாகும்பாபிஷேகத்திலும் பங்குபற்றினார். அங்கு ஏற்பட்ட அறிமுகத்தினால் கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பல வாணேசர் கோவிலில் பணியாற்ற அழைப்புக் கிடைத்தது. இவர் ஊர் திரும்பி தந்தையாரிடம் அனுமதிபெற்று ஒரு நாள் தனது மைத்துனர் து. குருஸ்வாமி ஐயருடன் கொழும்பு செல்வதற்காக புகையிரத நிலையம் சென்றார். இவரது தந்தையாரும் இவரை வழியனுப்புவதற்காக ரயில் நிலையம் சென்று திரும்பினார். சர்மாவும் மைத்துனரும் கொழும்பு சென்றனர். மகனை வழியனுப்பிவிட்டு திரும்பிவந்த கந்ததாஸ்ஐயர், கோவிலடியில் ஊர்மக்கள் சிலருடன் அளவளாவிவிட்டுப் படுக்கைக்குச் சென்றார். என்னே பரிதாபம் படுத்தவர் அதிகாலை பார்க்கும் போது மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டார். இதை அறிந்த சர்மாவும் மைத்துனரும் மறு நாள் ஊர் வந்து சேர்ந்து விட்டனர். இதனால் ஆலயப் பூஜைப் பொறுப்பு இவரிடம் சேர்ந்தது.

இவ்வாலயம் ஷண்முகநாத சர்மாவின் முயற்சியால் புனரமைக் கப்பட்டது. அந்நாளில் மந்திரியாக இருந்த சேர் கந்தையா வைத்தியநாதன் என்பவர் கோப்பாய் பாடசாலைப் பரிசளிப்பு விழாவிற்கு விசேட அதிதியாக வந்திருந்த வேளையில் அவரை அணுகி ஆலயத்தைப் புனர் நிர்மாணம் செய்ய வேண்டி கேட்டுக் கொண்டார். அவரும் எதுவித தயக்கமும் இன்றி பூரணமனத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்ய முன் வந்தார். அவரின் அயராத முயற்சியாலும், ஊரிலுள்ள செல்வந்தர்களின் அனுசரணையாலும் ஆலயம் புதுப்பொலிவுபெற்று இன்றைய நிலைக்கு வித்திட்டது.

இந்தியாவில் புகழ்பெற்ற கதாப்பிரசங்கமேதை திரு முருக. கிருபானந்தவாரியாரையும் இவ்வாலயத்திற்கு அழைத்து கதா காலட்சேபம் செய்வித்த பெருமையும் சர்மாவைச் சாரும். இதில் சர்மாவின் மைத்துனர் குருஸ்வாமி ஐயரினதும் மூத்தமகன் சிறுவனாயிருந்த உமாகாந்தனதும் பங்குப் பணி அளப்பரியது.

இப்படியாக ஆலய முன்னேற்றத்திற்காக உழைத்த சர்மா 1964ஆம் ஆண்டளவில் வீரபத்திர சுவாமி ஆலயத்திலிருந்து நீங்கி, நல்லூர் கந்தசுவாமி கோவிலின் நிரந்தர அர்ச்சகரானார்.

நல்லூர் முருகன் ஆலயத்தில் இவர் ஆற்றிய பணிகள் பற்பல. அவற்றுள் ஆறுமுககசுவாமியின் புனருத்தாராண மகா கும்பாபி ஷேகத்தை பிரதம குருவாக இருந்து நடத்தி வைத்தமை குறிப்பிடத் தக்க பாக்கியமாகும்.

நல்லூர் ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி பூஜையில் பெரும்பாலும் இவரே பிரதம குருவாக இருப்பார். நவராத்திரி இறுதியில் நடைபெறும் மகிஷாசுரஸம்காரத்தின் போது கன்னிவாழைவெட்டு நிகழ்வை மிகவும் திறம்படச் செய்வார்.

நல்லூர் கந்தனாலயத்தில் பணியாற்றிய வேளையிலும் கூட இவர் தனது தந்தையார் பணியாற்றிய கோப்பாய் தெற்கு நாச்சிமார் கோவிலில் வருடாவருடம், நடைபெறும் நவராத்திரி விழாவினை அவ்வாலய அறங்காவலர் அமரர் திரு செல்லப்பா அவர்களின் விருப்பத்திற்கிணங்க, பிரதம சிவாச்சாரியாராக இருந்து நடாத்தி வைப்பார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமயம், சங்கர நாராயணர் விக்ரகம் ஒன்று பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று பெருவிருப்பம் கொண்டார். கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டிருந்த வேளையிலும் கூட தமக்குத் தெரிந்த அன்பு உள்ளங் கொண்ட பெருமக்களிடமிருந்து நிதி உதவி பெற்று அவ்விக்ரகத்தை ஸ்தாபித்தார். ஆனால், சில ஆலய தர்மகர்த்தாக்கள் அவ்விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்வதற்கு தத்தம் ஆலயங்களில் இடமளிக்கவில்லை. அப்போது அத்தியடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்த ஆசிரிய அறங்காவலர் மிகப் பெருமனதுடன் அதை அங்கு பிரதிஷ்டை செய்வதற்கு பெரு விருப்பங்கொண்டு அனுமதியளித்தார். எனவே சங்கரநாராயணர் அவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஏறக்குறைய சுமார் ஐம்பது ஆண்டிற்கும் மேலாக நல்லூர் கந்தன் ஆலயத்தில் பணியாற்றிய சர்மா அவர்கள் 2002 ஆம் ஆண்டில் தமது பிரியபத்தினியையும் இழக்க நேரிட்டது. மிகவும் மனமுடைந்த நிலையில் அன்னார் ஆலய பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எல்லோரும் நல்ல வாழ்வு பெற்றுள்ளதைக் காணும் பாக்கியம் பெற்ற அவரின் வாழ்வு நிறைவாழ்வாக அமையப்பெற்று முருகன் திருவடி நிழலை அடையப்பெற்றது.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரமார் மனக்குமுறல்.

கதிரமலை கந்தனின் கருணையினால்
கந்ததாஸ ஐயர் நாகம்மா சமேதற்கு
மாங்கனியாய் கிடைத்த தாத்தாவே
கந்தன் நாமத்தை விரும்பி பெற்றீரே.

நாவலர் சாலையில் அறிவொளி பெற்று
பைந்தமிழ் இலக்கணம் கசடறக்கற்ற - பால
பண்டிதரே உங்களின் விகடப்பேச்சில்
எங்கள் வினைகளை தீர்த்தவரே.

துள்ளித்திரிந்து பள்ளி பயிலுங்கால்
பள்ளித்தோழனாய் உற்றுணையாய் இருந்தீர்
குழைவில் கேட்டதை விரைவில் ஈர்ந்தீரே
ஈருருளித் துணையுடன் தேசாரம் காட்டிநீர்.

நல்லைக்கந்தனில் பொன்விழா கண்டவரே
ஆறுமுகன் சேவையில் மனநிறைவு பெற்றீரே
சக்தியின்றேல் சிவமில்லை என்பதற்கிணங்க
பாட்டியின் பிரிவினாலே தூலமாய் வாழ்ந்தீரே.

கூப்பிட்ட உறவு தணிந்து விட்டது அந்தோ!
தணியவில்லை கூப்பிட்ட உறவுக்குரல்கள்
இன்முறுவல் கூடிய உன்முகம் காணாமல்
ஆற்றுவமோ எம்மனக் குமுறலை இங்கு இனி

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே உருவான எம் அண்ணா

ஷண்முகநாத அண்ணா என்று
சார்ந்து வாழ்ந்தார் கோவை மாநகரில்
சாந்தாதேவியை தம் துணையாக்கி
சுற்றம் சூழச் சுகத்துடன் வாழ்ந்து

வீரபத்திரரை விருப்புடன் பூசித்து
வீரம்மிக்க மக்களைப் பெற்று
வீறுநடை போட்டு விளங்கிய செம்மல்
விருப்புடன் நல்லூர் முருகனின் தொண்டினை

பற்றுடன் தானே ஆறுகாலமும் பாதமலர் பணிந்து
கற்ற கல்வியின் பயன் என உணர்ந்து
கந்தபுராண படனந் தன்னை
சிந்தையில் வைத்துத் துதிசெய்ததனால்

சீர்பெறு மக்கள் மருமக்கள் உடனே
பேரரும் வந்து பேணிப் பார்த்தனர்
ஊரவரெல்லாம் உவந்து களித்திட
உண்மை அன்புடன் உறவு கொண்டாடினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியைப் பிரிந்து மனமொடிந்தவேளை
மாண்புடன் பேரரின் மணவிழாக்கண்டு
மகிழ்ந்திடும் நல்ல மாதலலம் பெற்றார்
குணத்திடை குன்றென விளங்கிய அண்ணா

கந்தன் பயனைக் கண்ணென நினைத்து
மற்றவர்க்கு இடுக்கண் மனதினும் நினையாது
சுற்றத்துடனே சுகித்திடும் வேளை
பீட்டன் என்றொரு பேரும் அறிந்தார்

காற்றென வந்த காலனின் வேலையில்
மாற்றமின்றி சிறு பொழுதிருந்து
ஏற்றமுடைய எம் அன்பு நிறை அண்ணா
பெற்றார் தானே பெருமானின் பெரும் பாதம்

**பாசமுள்ள அன்புத்தம்பி**
**சி.முத்துச்சாமிசர்மா,**
**உடுவில்.**

நீ எந்த அளவிற்கு இறைவனை நாடுகிறாயோ அந்த அளவிற்கு உன் பலவீனங்கள் உன்னை விட்டு நீங்கிப் போகும். நீ செய்ய வேண்டியதை முழுமனதோடு செய்துவிட்டுப் பயனை இறைவனிடம் விட்டுவிடு.

யாரேனும் குறைகூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக்கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டுவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகன ஸம்ஸ்காரத்திற்குத் தேவையான பொருட்கள்

சந்தனம் 25கிராம்
அத்தர் 01 சீசா
பன்னீர் 1/2 போத்தல்
அரிசிமா 50 கிராம்
சம்பக் கூட்டு 25 கிராம்
மஞ்சள் மா 50 கிராம்
சந்தனக் கட்டை
சமித்துக்கட்டு 03
(அல்லது மாஞ்சமித்து)
ஊதுபத்தி 01 பைக்கற்று
கற்பூரம் 05 பைக்கற்று
நல்லெண்ணெய் 02 அவுன்ஸ்
அரப்பு 50 கிராம்
கறுப்பு எள்ளு 100 கிராம்
தேன் 02 அவுன்ஸ்
பசு நெய் 1/4 போத்தல்
தர்ப்பை (தலைப்புள்ளது) 100
மண்பானை (சிறிது) 01
மண்சட்டி 02
வாழைப்பழம் 01 கிலோ
வெற்றிலை 25
பாக்கு 1/4 கிலோ
மாம்பழம் 01
தோடம்பழம் 01
தேசிக்காய் 01
காரிக்கன் துணி 10 மீற்றர்
வேட்டி 01 (கர்த்தாவிற்கு)
பச்சரிசி 01 கிலோ
பால் 1/2 போத்தல்
இளநீர்
பூமாலை (கன்னிப்பெண், பிரமச்சாரி, சுமங்கலி, சுமங்கலன்)
துளசிமாலை (விதுரன், விதவை)
பிரேதத்திற்குக் கட்டுதற்குரிய உடுப்பு
சில்லறைக் காசு 100 ரூபா
உமி
ஓமத் தட்டு
அத்திக்கொப்பு
வட்டகை (அல்லது மண்சிட்டி) 06
பஞ்ச பாத்திரம், உத்தரணி
தட்டம் 02
கற்பூரத் தட்டு
செம்பு 01
சொரிபூ
சொரி துளசி
மாவிலை
நெய்ப்பந்தம் (பேரப் பிள்ளைகள் பிடிப்பதற்கு)
பச்சைத் தென்னோலையில் பின்னிய பன்னாங்குத் தட்டு
ஆசந்தி (பிரேதம் கொண்டு போவதற்குப் பாடை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி,சரு கொண்டு போவ தற்குத் தென்னம் மட்டையில் உறி
பிரேத சம்ஸ்காரம் செய்யும் இடத்தில் சரு (அரிசி)
பொங்குவதற்கு 3 கல்லு, விறகு
**குறிப்பு:-** முக வாசத்தை ( கையில் கட்டிய கோடித்துணி) தசாகம் வரை கவனமாகப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்.

**சுண்ணமிடித்தல்:-** வைதிக கர்மாவில் சுண்ணமிடித்தல் சொல்லப்படவில்லையெனினும் தேச வழமை காரணமாகப் பல இடங்களில் அது வழக்கிலுண்டு. சுண்ணமிடித்தல் செய்யப்பட வேண்டுமெனில் அதற்குரிய உரல், உலக்கை, அறுகம்புல், மஞ்சள்மா, சுண்ணாம்பு, நல்லெண்ணெய், வெள்ளைத்துணி (சிறிய துண்டு) என்பவற்றைச் சேகரித்துக் கொள்ளவேண்டும்.

**மயானத்துக்குக் கொண்டு போக வேண்டிய பொருட்கள்**

எள், பச்சரிசி, அத்திக்கொப்பு, நெய் 02 அவுண்ஸ், வட்டகை 02 (அல்லது மண் சிட்டி) தர்ப்பை தலைப்புள்ளது 15, பானை 01, பஞ்ச பாத்திரம், உத்தரணி, வெற்றிலை, பாக்கு, சில்லறைக் காசு, தாள்க்காசு, வாளி, கயிறு, சரு, ஹோமாக்னி - சரு, செம்பு - தண்ணீருடன், பெரிய கத்தி

## நக்ன தானம்

எள் (சிறிதளவு)
துளசி
தர்ப்பை
பஞ்ச பாத்திரம், உத்தரணி
தீபம்
ஜலபாத்திரம்
வெற்றிலை, பாக்கு

தக்ஷிணை
ஒரு வேட்டியில் அரிசி, காய்கறி முதலியவற்றை வைத்துக் கட்டிய முடிச்சு

தானம் கொடுப்பதற்கு ஒரு பிராமணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஷாணஸ்தாபனம்

தகன சம்ஸ்காரம் செய்த அன்றே பாஷாண ஸ்தாபனம் செய்ய வேண்டும். தவறின் 10ஆம் நாள் செய்ய வேண்டும்.

கருங்கற் சல்லி 03
சொரிதுளசி
சில்லறைக் காசு
தர்ப்பை (நுனியுள்ளது)
பித்தளைச் சட்டி 01
கரண்டி 01
செம்பு 01
குத்துவிளக்கு
பஞ்ச பாத்திரம், உத்தரணி
தட்டம் 02
அரிசிமா (ரொட்டிக்கு)
சந்தனம் 25 கிராம்
கற்பூரம் 01 பைக்கற்
ஊதுபத்தி 01 பைக்கற்
பழம் 05
பாக்கு 05


வெற்றிலை 05
எள்ளு 100 கிராம்
மண்சட்டி 02
மண்பானை 01
உறி 01
திருகணை01
தீட்டல் பச்சரிசி 01 கிலோ
பால்1/4 போத்தல்
தயிர்
இளநீர்
அரிசிமா 25 கிராம்
மஞ்சள் மா 25 கிராம்
பன்னீர் 1/2 போத்தல்
மாம்பழம் 01
தேன் 02 அவுண்ஸ்
பசு நெய் 02 அவுண்ஸ்
தோடம்பழம் 01

1. பித்தளைச் சட்டியும் கரண்டியும் அரிசி (பிண்டம்) பொங்குவதற்கு. இந்தச் சட்டியும் கரண்டியும் சபிண்டீ கரணத்தன்று (12ஆம் நாள்) நிமித்தருக்குக் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பாஷாணம் ஸ்தாபித்த இடத்துக்கு அருகில் பிண்டத்துக்குரிய அரிசியைப் பொங்க வேண்டும். அதற்காக அடுப்பு ஒன்று தயார் செய்ய வேண்டும். பிண்டம் - 2
3. தனி அரிசிமாவைக் குழைத்து அதே அடுப்பின் தணலில் ரொட்டியை வேக வைத்து எடுக்க வேண்டும். ரொட்டி - 2
04. பாஷாணஸ்தாபனத்திற்காக ஒரு அடி ஆழமுடைய வ்ருத்த குண்டம் ஒன்று தோண்ட வேண்டும்.
05. ஒரு மண் சட்டிக்கு அடியில் மூன்று பெரிய துவாரம் இடவேண்டும். பானைக்கு அடியில் ஒரு சிறிய துவாரம் இடவேண்டும்.
06. எள் சேர்த்து இரண்டு பிண்டம். கோழிமுட்டைப் ப்ரமாணம்.
07. ஒரு பாத்திரத்தில் ஜலம்
08. பாஷாண ஸ்தாபனத்தன்று அபிஷேகத்திற்கு எந்தெந்தத் திரவியங்களைப் பயன்படுத்துகின்றோமோ அதேபோல் தினமும் அபிஷேகம் செய்ய வேண்டும்.
09. வாசோதகம் தினமும் மூன்று செய்ய வேண்டும். (மொத்தம் 30) திலோதகம் முதலாவது நாளில் 3 இரண்டாவது நாளில் 4 . இவ்விதம் தினமும் ஒவ்வொன்று கூட்டிச் செய்ய வேண்டும். (மொத்தம் 75)




1. பாஷாணஸ்தாபன குண்டம்
2. குத்துவிளக்கு
3. கர்த்தா
4. வாத்தியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சயனத்திற்கு தேவையான பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| நெய் | 1/4 போத்தல் | ஊதுபத்தி | 01 பைக்கற் |
| சமித்து | 02கட்டு | வெற்றிலை | 10 |
| (அல்லது மாஞ்சமித்து) | | பாக்கு | 10 |
| தர்ப்பை | 1 | 5சொரிதுளசி | |
| (நுனியுள்ளது) | | வாழையிலை | 03 |
| நவதானியம் | 05 கிராம் | பானை | 01 |
| நெற்பொரி | 50 கிராம் | கோடிச் சால்வை | 01 |
| எள்ளு | 01 பிடி | பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| பன்னீர் | 1/2 போத்தல் | செம்பு | 01 |
| அரிசிமா | 50 கிராம் | வட்டகை | 02 |
| மஞ்சள்மா | 50 கிராம் | (அல்லது மண்சிட்டி) | |
| மாம்பழம் | 01 | அத்திக்கொப்பு | |
| தோடம்பழம் | 01 | கண்டங்கத்தரிக்காய் | 01 |
| தேசிக்காய் | 01 | கறுப்பு/நீல நிற நூல் | |
| நல்லெண்ணெய் | 02 அவுண்ஸ் | உமி சிறிதளவு | |
| அரப்பு சிறிதளவு | | தீப்பந்தம் | 01 |
| சர்க்கரை சிறிதளவு | | துளசிச் செடி | 01 |
| பால் | 1/2 போத்தல் | ரொட்டி | 05 |
| தயிர் | | அவித்த பயறு | |
| இளநீர் | 02 | மண்வெட்டி | |
| தேன் | 02 அவுண்ஸ் | வாளி, கயிறு | |
| வாழைப்பழம் | 01 கிலோ | பெரிய வாளி | 02 |
| சூடம் | 05 பைக்கற் | (தண்ணீர் எடுக்க) | |

1. ரொட்டி தனி அரிசிமாவைக் குழைத்துத் தணலில் வேகவைத்து எடுக்க வேண்டும்.
2. முகவாசத்தை (கையில் கட்டிய துணி) சஞ்சயனத்திற்குப் புறப்படும்போது இடது கையில் கட்டிக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகன தினத்தன்று பாஷாண ஸ்தாபனம் செய்திருப்பின் தசாகத்திற்குத் (10ஆம் நாள்) தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| நாலுமுழ வேட்டி | 01 |
| சால்வைத் துண்டு | 01 |
| பூமாலை | 01 |
| துளசி மாலை | 01 |
| நெல் | சிறிதளவு |
| கோமயம் | சிறிதளவு |
| பச்சையரிசிச் சாதம் (பிரபூத பலிக்கு) | |
| பெரிய கடகம் | 01 |
| நெய்ப்பந்தம் | 01 |
| தொன்னைகள் | 30 |

**படையலுக்கு:**

பச்சரிச் சாதம்

குத்தரிசிச் சாதம்

சகல கறி வகைகள்

சகல பலகார பக்ஷிண வகைகள்

சகல பழ வகைகள்

விரும்பிய சாப்பாட்டு வகைகள்

குடை, கொடி, ஆலவட்டம் } வெள்ளைக் கோடித் துணியில் செய்ய வேண்டும்.

வழமைபோல அபிஷேகத்துக்குரிய பொருட்களும் பிண்டத்திற்குச் சாதமும் ரொட்டி போன்ற பொருட்களும் தேவை.

## தசாக தினத்தன்று (10ஆம் நாள்) பாஷாண ஸ்தாபனம் செய்வதாயின் தேவையான பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| கருங்கற் சல்லி | 03 | பஞ்ச பாத்திரம், உத்தரணி | |
| சொரி துளசி | | தட்டம் | 02 |
| சில்லறைக் காசு | 50 | அரிசிமா (ரொட்டிக்கு) | |
| தர்ப்பை (நுனியுள்ளது) | 100 | சந்தனம் | 25 கிராம் |
| பித்தளைச் சட்டி | 01 | கற்பூரம் | 05 பைக்கற் |
| கரண்டி | 01 | ஊதுபத்தி | 01 பைக்கற் |
| செம்பு | 01 | வாழைப்பழம் | 01 கிலோ |
| குத்துவிளக்கு | | பாக்கு | 1/4 கிலோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வெற்றிலை | 25 |
| எள்ளு | 1/4 கிலோ |
| மண்சட்டி | 02 |
| திருகணை | 01 |
| பால் | 1/4 போத்தல் |
| தயிர் | |
| இளநீர் | 02 |
| அரிசிமா | 25 கிராம் |
| மஞ்சள்மா | 25 கிராம் |
| பன்னீர் | 1/2 போத்தல் |
| மாம்பழம் | 01 |
| தேன் | 02 அவுண்ஸ் |
| பசு நெய் | 02 அவுண்ஸ் |
| தோடம்பழம் | 01 |
| நாலுமுழ வேட்டி | 01 |
| சால்வைத் துண்டு | 01 |
| பூமாலை | 01 |
| துளசி மாலை | 01 |
| நெல் | சிறிதளவு |
| கோமயம் | சிறிதளவு |

| | |
|---|---|
| பச்சரிச் சாதம் (பிரபூதபலிக்கு) | |
| பெரிய கடகம் | 01 |
| நெய்ப்பந்தம் | 01 |
| தொன்னைகள் | 30 |

**படையலுக்கு**

பச்சரிச்சாதம்
குத்தரிசிச் சாதம்
சகல கறிவகைகள்
சகல பலகார பக்ஷணவகைகள்
சகல பழவகைகள்
விரும்பிய சாப்பாட்டு வகைகள்

குடை, கொடி, ஆலவட்டம் } வெள்ளைக் கோடித் துணியில் செய்ய வேண்டும்.

| | |
|---|---|
| றொட்டி | 03 |
| பிண்டம் | 20 |
| தண்டுடன் கூடிய தலைவாழையிலை | 03 |

1. பித்தளைச் சட்டியும் கரண்டியும் அரிசி (பிண்டம்) பொங்குவதற்கு 1/2 படி அரிசி பொங்கி 20 பிண்டம் (எள் சேர்த்து) பிடிக்க வேண்டும். 10 பிண்டம் பெரிதாகவும் 10 சிறிதாகவும் இருக்க வேண்டும். வாழைப்பொத்தி வடிவில் எள் சேர்த்து ஒரு பெரிய பிண்டம் (பிரபூத பலி)

இந்தச் சட்டியும் கரண்டியும் சபிண்டீகரணத்தன்று (12 ஆம் நாள்) நிமித்தருக்குக் கொடுக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தனி அரிசிமாவைக் குழைத்து அடுப்பின் தணலில் ரொட்டியை வேக வைத்து எடுக்க வேண்டும். ரொட்டி - 3
3. பாஷாண ஸ்தாபனத்திற்காக ஒரு அடி ஆழமுடைய வ்ருத்த குண்டம் ஒன்று தோண்ட வேண்டும்
4. ஒரு மண்சட்டிக்கு அடியில் மூன்று பெரிய துவாரம் இட வேண்டும்.
5. ஒரு பாத்திரத்தில் ஜலம்
6. வாசோதகம் தினமும் மூன்று செய்ய வேண்டும். (மொத்தம் 30) திலோதகம் முதலாவது நாளில் 3.இரண்டாவது நாளில் 4.இவ்விதம் தினமும் ஒவ்வொன்று கூட்டிச் செய்ய வேண்டும். (மொத்தம் 75)

## சாந்தி ஹோமம், ஆனந்த ஹோமம்

பாஷாணத்தைப் புண்ணிய தீர்த்தத்தில் சேர்த்துவிட்டு சவரம் செய்து ஸ்நானம் செய்ய வேண்டும். வீட்டு முற்றத்தில் சாந்தி ஹோமம், ஆனந்த ஹோமம் செய்ய வேண்டும்.




1. ஓமத்தட்டு
2. குத்துவிளக்கு
3. கர்த்தா
4. வாத்தியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| நாம்பன் கன்று | 01 | கற்பூரம் | 02பைக்கற் |
| மாவிலங்கம் இலை | 10 | பத்தி | 01 பைக்கற் |
| நெல் - சிறிதளவு | | சந்தனம் | |
| உமி | | பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| நெய் | 1/4 போத்தல் | செம்பு | 01 |
| சமித்துக் கட்டு | 03 | வட்டகை | 08 |
| (அல்லது மாஞ்சமித்து) | | சில்லறைக் காசு | |
| ஓமத்தட்டு | | பச்சையரிசி - சிறிதளவு | |
| துளசிக் கன்று | 01 | சொரிபூ | |
| பாசி - சிறிதளவு | | குத்துவிளக்கு | |
| தர்ப்பை (நுனியுள்ளது) | | தேங்காயெண்ணெய் | |
| பழம் | 10 | தட்டம் | 02 |
| பாக்கு | 10 | அக்ஷதை | |
| வெற்றிலை | 10 | | |

ஆனந்த ஹோமாக்கினியை எடுத்து அடுப்பு மூட்டவேண்டும்.

## 11ஆம் நாள்

1. நவசிரார்த்தம்
2. விருஷோத்ஸர்ஜனம்
3. ஏகோதிஷ்டம்
4. ஆவிருத்தாத்ய மாசிகம்
5. பஞ்சதச மாசிகம்

### 1. நவசிரார்த்தம்


நவசிரார்த்தம் 5 அல்லது 6 என்பது சூத்திரத்திற்குத் தகுந்தபடி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆபஸ்தம்பிகளுக்கு ஒற்றைப்படை நாளில் செய்யவேண்டியது. நின்று போனால் 11ஆம் நாளில் சேர்த்துச் செய்யவேண்டும்

| | |
|---|---|
| சந்தனம் | வேட்டி |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | அரிசி, காய்கறி |
| சில்லறைக்காசு | தக்ஷிணை |
| அக்ஷதை | வெற்றிலை, பாக்கு |
| தர்ப்பை (நுனியுள்ளது) | சொரிபூ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. விருக்ஷோத்ஸர்ஜனம்




| | | | |
|---|---|---|---|
| சந்தனம் | 25கிராம் | பச்சை அரிசி | 1கிலோ |
| ஊதுபத்தி | 1பைக்கற் | நூல் சுற்றிய குடம் | 01 |
| பழம் | 10 | *சரு | |
| பாக்கு | 15 | அறுகு | |
| வெற்றிலை | 15 | மாவிலை | |
| மஞ்சள்மா | 25கிராம் | பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| கற்பூரம் | 2பைக்கற் | வட்டகை | 08 |
| பசுநெய் | 1/4 போத்தல் | பலாசமிலை | 06 |
| சால்வைத்துண்டு | 01 | தேங்காய் | 02 |
| நாம்பன் கன்று | 01 | தர்ப்பை | 54 |
| சில்லறைக்காசு | | (நுனியுள்ளது) | |
| அக்ஷிதை | | தட்டம் | 02 |
| சமித்துக்கட்டு | 3கட்டு | செம்பு | 01 |
| (அல்லது மாஞ்சமித்து) | | குத்துவிளக்கு | |
| உமி | | கற்பூரத்தட்டு | |
| சொரிபூ | | ஓமத்தட்டு. | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடபதானம்:** வேட்டி, அரிசி, காய்கறி, தீபம், ஜலபாத்திரம், எள்ளு, தக்ஷிணை

***சரு:** சிறிதளவு அரிசி மாவில் சிறிது சர்க்கரை சேர்த்து வேகவைக்க வேண்டும்.


விருஷோத்ஸர்ஜனம் வீட்டு வாசலுக்குமுன் செய்ய வேண்டும். விருஷோத்ஸர்ஜனத்திற்கு சிவப்பு நிறமுள்ள ஒன்று அல்லது இரண்டு வயதுள்ள விருஷபம் விசேஷம்.

புத்திரன் இல்லாத ஸ்திரீ கணவனுக்குமுன் இறந்தால் விருஷோத்ஸர்ஜனம் செய்யவேண்டியதில்லை. ஒரு பசுவைத் தானம் செய்யவேண்டும்.

கணவன் மனைவிக்கு விருஷோத்ஸர்ஜனம் செய்ய வேண்டியதில்லை.

விருஷோத்ஸர்ஜனம் - விருஷபத்தைக் கலைத்து விடுதல்.

## ஏகோதிஷ்டம்




1. புண்யாகம்
2. ஓமகுண்டம்
3. குத்துவிளக்கு
4. கர்த்தா
5. வாத்தியர்
6. அடுப்பு (சாதம்வைக்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரப்பு சிறிதளவு

நல்லெண்ணெய் சிறிதளவு

தேசிக்காய் 01

விளக்கிய எள் - சர்க்கரை (சிறிதளவு)

பசுநெய்1/4 போத்தல்

தேன் 2அவுண்ஸ்

கறுப்பு எள்

வெற்றிலை 10

பழம் 05

பாக்கு 10

பஞ்சபாத்திரம்,உத்தரணி

சந்தனம்

சில்லறைக்காசு

தண்டுடன் கூடிய தலைவாழையிலை 02

தர்ப்பை நுனியுள்ளது

தொன்னை 04 (அல்லது வட்டகை)

துளசி

அத்திஇலை 06

உமி

சமித்துக்கட்டு 03 (அல்லது மாஞ்சமித்து)

விறகு

குத்துவிளக்கு

செம்பு 01

தட்டம் 02

கற்பூரம் 02 பைக்கற்

வீட்டுக்குத் தெற்கில் அல்லது வடகிழக்கில் முக்கோண வடிவில் ஒரு முழ ஆழத்தில் குண்டம் ஒன்று அமைக்க வேண்டும். உள் விஸ்தீரணம் 1அடி.

3/4 படி தீட்டல் பச்சையரிசியில் கத்தரிக்காய், வாழைக்காய், காரை, முல்லை, முசுட்டை இவற்றை வெட்டிப்போட்டு வேகவைக்க வேண்டும். இதைக் குண்டத்துக்கு அண்மையில் செய்யவேண்டும்.

குதிரைக்குளம்பு பிரமாணத்தில் 32 உருண்டைகள்.

தேங்காய்ப் பிரமாணம் 01 உருண்டை

சொரிசாதம் கொஞ்சம்.

**ஆவிருத்தாத்ய மாசிகம்**

கர்த்தா ஸ்நானம் செய்து ஆவிருத்தாத்ய மாசிகத்தைச் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சந்தனம் | | வேட்டி, சால்வை |
| கறுப்பு எள்ளு | அரிசி, காய்கறி | |
| துளசி | வெற்றிலை | |
| தர்ப்பை - நுனியுள்ளது | பாக்கு | |
| சில்லறைக்காசு | தக்ஷிணை | |

**பஞ்சதச மாசிகம்**

கர்த்தா ஸ்நானம் செய்து பஞ்சதச மாசிகத்தைச் செய்யவேண்டும்.

15 அல்லது 05 அல்லது 03 அல்லது ஒரு பிராமணரையாவது வரிக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| சந்தனம் | 25கிராம் | சில்லறைக்காசு | 50ரூபா |
| ஊதுபத்தி | 01 பைக்கற் | துளசி | |
| பழம் | 10 | பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| பாக்கு | 15 | வட்டகை | 18 |
| வெற்றிலை | 15 | செம்பு | 01 |
| பச்சையரிசி | 1 கிலோ | அத்தியிலை | 06 |
| கற்பூரம் | 2 பைக்கற் | மாவிலை | |
| பசுநெய் | 1/4 போத்தல் | உமி | |
| தேங்காய் | 01 | ஓமத்தட்டு | |
| கறுப்பு எள்ளு | | தட்டம் | 02 |
| தேன் | 2அவு | குத்துவிளக்கு | |
| தர்ப்பை நுனியுள்ளது | | கோமயம் சிறிதளவு | |
| சமித்துக்கட்டு | 03 அல்லது மாஞ்சமித்து | | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லெண்ணெய்
அரப்பு
தேசிக்காய்
சர்க்கரையுடன் கலந்த
விளக்கிய எள்
வேட்டி சால்வை
யக்ஞோபவீதம்
ஜலபாத்திரம்
விபூதிப்பை
தக்ஷிணை
ஆசனப்பலகை
சாப்பாட்டிற்குப்
பச்சையரிசிச் சாதம்
கறிவகைகள் பச்சடி
வகைகள்
அரிசிப்பாயசம்
உழுந்துவடை
பலகாரவகைகள்
பழவகைகள்
தலைவாழையிலை
ஒருவருக்கு 2வீதம்
தொன்னைகள்
பருப்பு, பாயசம்,தயிர்
நெய், தேன் போன்றவை
வைப்பதற்கு

இவை அனைத்தும்
பிராமணர்களின்
எண்ணிக்கைக்கு
ஏற்றவாறு அதாவது
எத்தனை பிராமணர்களைத்
தானத்துக்கு நியமிக்கின்றோமோ
அதற்கு ஏற்றவாறு
தயார்செய்ய வேண்டும்.
நல்லெண்ணெய்
தொன்னையில் அல்லது
சிறிய கிண்ணத்தில்
விட்டுவைக்கவேண்டும்.

**மண்டலம்:** வீட்டு வாயிற்படிக்கு எதிரில் முக்கோணவடிவில் மண்டலம் அமைக்க வேண்டும். உள் விஸ்தீரணம் 01 விதஸ்தி (12 அங்குலம்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் அலம்ப வாளியில் தண்ணீரும் செம்பும்.

**பிண்டம்;** சுவதேயம் வைத்த சாதம் சேர்த்து 15 பிண்டங்கள் பிடிக்கவேண்டும்.

நிமந்தரப் பிராமணர்கள் சாப்பிட்ட இலைகள், எஞ்சிய உணவுப் பதார்த்தங்கள் இவற்றை கிடங்கில் புதைக்கவேண்டும்.

சபிண்டீகரணத்துக்கு முன் செய்யும் மாசிகங்களை ஏகோதிஷ்ட விதானமாகச் செய்யவேண்டும்.




1. புண்யாகம்
2. ஓமத்தட்டு
3. குத்துவிளக்கு
4. கர்த்தா
5. வாத்தியார்
6. தானப் பிராமணர்கள்

**சபிண்டீகரணம் (12 ஆம் நாள்)**

மூன்று பிராமணர்களை வரிக்கவேண்டும். அவர்களில் ஒருவரை நிமித்தராக நியமிக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| சந்தனம் | 25 கிராம் | சில்லறைக்காசு | 75ரூபா |
| ஊதுபத்தி | 01 பைக்கற் | மாவிலை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கற்பூரம் | | பலாசமிலை | 06 |
| நெய் | 1/4போத்தல் | அத்தியிலை | 06 |
| பழம் | 15 | அறுகு | |
| பாக்கு | 15 | கோமயம் சிறிதளவு | |
| வெற்றிலை | 15 | சொரிதுளசி | |
| பச்சையரிசி | 1கிலோ | சொரிபூ | |
| தேங்காய் | 01 | அக்ஷதை | |
| கறுப்பு எள் | 150 கிராம் | பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| தேன் | 2அவு | வட்டகை | 08 |
| சமித்துக்கட்டு | 04 | செம்பு | 01 |
| அல்லது மாஞ்சமித்து | | தட்டம் | 03 |
| தர்ப்பை | 108 | குத்துவிளக்கு | |
| (நுணியுள்ளது) | | உமி | |
| நெல்லு சிறிதளவு | | ஓமத்தட்டு | |

பிண்ட கண்டத்துக்கு பொன் அல்லது வெள்ளிக் கம்பி அல்லது தர்ப்பை

**நிமித்தருக்கு:** தீபம், குடை, பாதரட்ஷை, பாய், தலையணை, விசிறி, பொன் மேலும் விரும்பிய உபசாரப் பொருட்கள் வேட்டி, சால்வை, பெண்ணின் சபிண்டீ கரணமாயின் சேலை சட்டைத்துணி போன்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நல்லெண்ணெய்<br>அரப்பு<br>தேசிக்காய்<br>சர்க்கரையுடன் கலந்த<br>விளக்கிய எள்<br>வேட்டி, சால்வை<br>யக்ஞோபவீதம்<br>ஜலபாத்திரம்<br>விபூதிப்பை<br>தக்ஷிணை<br>ஆசனப்பலகை | இவை அனைத்தும்<br>மூன்று<br>பிராமணர்களுக்கு<br>ஏற்றவாறு மும்மூன்று<br>பொருட்கள்<br>தயார்செய்யவேண்டும்<br>நல்லெண்ணெய் 3<br>தொன்னையில் அல்லது<br>3 கிண்ணங்களில்<br>விடவேண்டும் |

| | |
|---|---|
| சாப்பாட்டிற்கு<br>பச்சரிசிச் சாதம்<br>கறிவகைகள், பச்சடி வகைகள்<br>அரிசிப்பாயசம்<br>உழுந்துவடை<br>பலகாரவகைகள்<br>பழவகைகள்<br>தண்டுடன் கூடிய<br>தலைவாழையிலை 07<br>தொன்னைகள்<br>பருப்பு, பாயசம், தயிர்,<br>நெய், தேன் போன்றவை<br>வைப்பதற்கு | இவை அனைத்தும்<br>நிமித்தருக்குத் தனியாகவும்<br>மற்ற இருவருக்குத்<br>தனியாகவும் பாகம்<br>செய்யவேண்டும்<br><br>பாஷாணத்தாபனத்தன்று<br>பிண்டத்திற்கு அரிசி<br>பொங்கிய அதே சட்டியில்<br>நிமித்தரின் சாப்பாட்டிற்குரிய<br>சாதம் வைக்கவேண்டும்.<br>இந்தச் சட்டியைக் கடைசியில்<br>நிமித்தருக்குக் கொடுக்கவேண்டும் |

**பிண்டம் :** பிதிரருக்கும் விஸ்வே தேவருக்கும் வைத்த சாதத்தில் ஆறு பிண்டமும் வாயச பிண்டம் ஒன்றும் எள், துளசி, சுதேயம் வைத்த சாதம் என்பனவும் சேர்க்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிமித்தருக்கு வைத்த சாதத்தில் வாழைப்பூ வடிவில் ஒரு பிண்டமும் பிடிக்கவேண்டும்.

**வைதரணீ கோதானம் :** கன்றுடன் கூடிய பசு தக்ஷிணை.

**பாதேய சிரார்த்தம் :** வேட்டி, அரிசி, காய்கறி, ஒரு கிண்ணத்தில் தயிர், தீபம், தக்ஷிணை.

விருத்த பிரபிதாமகனுக்குச் செய்யும் பாதேய சிராத்தமானது ஆமத்தினாலேயே செய்யவேண்டும். அவருக்கு வேறு சிராத்தமே கிடையாது.

## பிண்டங்களை ஒன்று சேர்ப்பது





1. புண்யாகம்
2. ஓமத்தட்டு
3. குத்துவிளக்கு
4. கர்த்தா
5. வாத்தியார்
6. விஸ்வே தேவர்
7. பிதிர்
8. நிமித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மண்டலம் : வீட்டு வாயிற்படிக்கு எதிரில் கால் அலம்ப மண்டலம் அமைக்கவேண்டும்.




1. வடக்கில் சதுரம் - விஸ்வே தேவர்
2. நடுவில் முக்கோணம் - நிமித்தர்
3. தெற்கில் வட்டம் - பிதிர்கள்
4. மண்டலங்களின் உள் விஸ்தீரணம் 1 விதஸ்தி (12 அங்குலம்)
5. ஒவ்வொரு மண்டலங்களுக்கும் இடைவெளி 1/2 விதஸ்தி (6 அங்குலம்)

ஒரு வாளியில் தண்ணீரும் செம்பும் ஒரு தட்டத்தில் சிறிதளவு சந்தனம், நெய்,கோமயம், துளசி, எள், அக்ஷிதை, கட்டைத்தர்ப்பை 10 என்பன வைக்கப்பட வேண்டும்.

## கிருகயக்ஞம் (13 ஆம் நாள்)




1. புண்யாகம்
2. நவக்கிரக பதம்
3. கும்பம்
4. ஓமத்தட்டு
5. கர்த்தா
6. வாத்தியார்
7. குத்துவிளக்கு

**தானியம் :** கோதுமை, பச்சரிசி, துவரை, பயறு, கடலை, மொச்சை உழுந்து, எள்ளு, கொள்ளு

**சமித்து :** எருக்கலை, பலாசு, நாயுருவி, கருங்காலி, அரசு, அத்தி, அறுகு, வன்னி, தர்ப்பை, சீந்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | |
|---|---|
| குங்குமம் | |
| சந்தனம் | |
| மஞ்சள்மா | |
| ஊதுபத்தி | |
| கற்பூரம் | 05 பைக்கற் |
| பசுநெய் | 01 போத்தல் |
| தேங்காய் | 03 |
| பச்சரிசி | 03 கிலோ |
| சால்வைத்துண்டு | 01 |
| பழம் | 20 |
| பாக்கு | 20 |
| வெற்றிலை | 25 |
| தர்ப்பை | 108 |
| நுனியுள்ளது | |
| சில்லறைக்காசு | |
| கண்ணாடி (சிறிது) | 01 |

| | |
|---|---|
| சர்க்கரைச்சாதம் | 1/2 படி |
| பால் | |
| அறுகு | |
| மாவிலை | |
| பலாசமிலை | 06 |
| மாஞ்சமித்து | |
| உமி | |
| ஓமத்தட்டு (பெரியது) | |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | |
| செம்பு | 01 |
| நூல் சுற்றிய குடம் | 01 |
| வட்டகை | 08 |
| தட்டம் | 02 |
| குத்துவிளக்கு | |
| அக்ஷதை | |
| வெள்ளை, சிவப்பு,மஞ்சள், நீலப் பூக்கள், துளசி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேஷ்டி




பந்தல் ஒன்பது பாகம் நீள அகலம்

பஞ்சகவ்ய மேடை ஒரு பாகம்.

சிவகும்பம், வர்த்தனி கும்பம் இரண்டும் இருக்குமிடங்கள்

தனித்தனியே ஒவ்வொரு பாகச் சதுர மேடைகள்

சிதாஸ்தானம் 4X2 பாகம்.

திக்தேவதா ஸ்தானங்களில் தசாயுத கும்பங்கள்

பதம் 5X5= 25

ம - மஞ்சள் மா

சி - செங்கல் மா

க - கரி மா

வெ - அரிசி மா

ப - பச்சிலை மா

| | | | | |
|---|---|---|---|---|
| க | க | சி | ப | ப |
| க | க | ம | ப | ப |
| வெ | ம | ம | ம | ம |
| வெ | வெ | ம | சி | சி |
| வெ | வெ | க | சி | சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| நெல்லு | 07 படி | கற்பூரத்தட்டு | |
| பச்சரிசி | 02 படி | தீபக்கால் | |
| பயறு | 01 படி | தூபக்கால் | |
| உழுந்து | 01 படி | ஊதுபத்தி | |
| எள்ளு | 01 படி | கற்பூரம் | |
| நவதானியம் | 100 கிராம் | கும்பம் | 12 |
| நெற்பொரி | 100 கிராம் | பால் | 1/4 போத்தல் |
| **பஞ்ச சூர்ணம்:** | | தயிர் சிறிதளவு | |
| மஞ்சள் மா | | நெய் | 1/2 போத்தல் |
| அரிசி மா | | கோஜலம் | |
| செங்கல் மா | | கோமயம் | |
| கரி மா | | கத்திரிக்கோல் | |
| பச்சிலை மா | | சமித்து | 02 கட்டு |
| (புல்லாந்தி மா) | | வாழையிலை | 20 |
| | | மாவிலை | 100 |
| பஞ்ச வர்ண நூல் | 01 கழி | தர்ப்பை நுனியுடன் | 100 |
| நூற்பந்து | 05 | தேங்காய் | 13 |
| பூமாலை | 02 | பழம் | 25 |
| சரப்பந்து | 04 | பாக்கு | 25 |
| சொரிபூ | | வெற்றிலை | 25 |
| பத்திரம் | | சந்தனம் | 25 கிராம் |
| குத்துவிளக்கு | | சில்லறைக்காசு | |
| பஞ்சபாத்திரம், உத்தரணி | | நெய்ச்சிட்டி | |
| தட்டம் | 01 | அக்ஷதை | |
| மணி | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராத்தத்தில் சேர்க்கக் கூடிய பொருட்கள்

| | |
|---|---|
| உழுந்து | கண்டங்கத்தரி |
| கறுப்பு எள் | மிளகு |
| கோதுமை | நெய் |
| பயறு | தயிர் |
| பாகற்காய் | பசுப்பால் |
| பலாப்பழம் | சக்கரை, வெல்லம் |
| மாம்பழம் | கடலுப்பு |
| மாதுளம்பழம் | நெல்லிக்காய் |
| கறிவேப்பிலை | இராசவள்ளிக்கிழங்கு/கரணைக்கிழங்கு |
| எலுமிச்சம்பழம் | தேன் |
| கடுகு | கடலை |
| திராட்சை | தேங்காய் |
| தேங்காய் எண்ணெய் | வாழையிலை |
| வாழைப்பழம் | வாழைக்காய் |
| வாழைத்தண்டு | வாழைக்கிழங்கு |
| வாழைக்காய் | புடலங்காய் |
| ஏலம் | கராம்பு |
| நல்லெண்ணெய் | இஞ்சி |
| கடுக்காய் | வெள்ளரிக்காய் |
| பேரீந்து | கெக்கரிக்காய் |
| குங்குமப்பூ | நற்சீரம் |
| லவங்கம் | |

மற்றும் அவரை மஞ்சள், புளி, கீரை, காரை, முல்லை,முசுட்டை, பிரண்டை,பாக்கு வெற்றிலை முதலியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராத்தத்தில் சேர்க்கக் கூடாத பொருட்கள்

பெருங்காயம், வெண்காயம், பூடு (உள்ளி), பப்படம், கொள்ளு, காராமணி, துவரம்பருப்பு, முருங்கைக்காய், சுரைக்காய், பூசனிக்காய், பெருஞ்சீரகம், இன்றைய நவீன காய்கறிகள், குத்தரிசி, சம்பா அரிசி, கடலை, கடலைப்பருப்பு ஆகியன.

**சிராத்தத்தின் ஏழு பலன்கள்.**

ஹோமத்தால் தேவர்களும்

பிராமணபோஜனத்தால் ஸ்வர்க்கத்தில் உள்ளவர்களும்

பிண்டதானத்தால் யமலோகத்தில் உள்ளவர்களும்

நல்ல சாப்பாட்டால் மனிதர்களும்

உச்சிஷ்டத்தால் பேய், பிசாசுகளும்

விகிரான்னத்தினால் நரகத்திலுள்ளவர்களும்

காக்கைக்குப்போடும் பிண்டத்தினால் தெரியாத பித்ருக்களும்

**திருப்தியடைவார்கள்.**

* * * * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்





அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் **அமரர் ப்ரம்மஸ்ரீ.கந்ததாஸஐயர் சண்முகநாதக்குருக்கள்** அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவி செய்த அன்பு உள்ளங்களுக்கும், அனுதாபச் செய்திகள், அஞ்சலிகள் வழங்கியவர்களுக்கும் அவரது இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் குறிப்பாக இம்மலரில் சேர்க்கப்பட்ட வைதிக அபரக்கிரியா பதார்த்த சூசிகா என்னும் நூலினைத் தொகுத்து வழங்கிய கொழும்புத்துறை வைதிக கிரியா ரத்னா **சோம.வரதராஜசர்மா** அவர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியை சம்பந்தமான விபரங்களை உபசரித்து உதவிய நீர்வேலி ஆ.சந்திரசேகரக் குருக்கள் அவர்களுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்ட கரிகணன் பிறிண்டேர்ஸ் ஸ்தாபனத்தாருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி



இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

சிவகெங்கை
முருகேச ஐயர்


கணபதி ஐயர்

1. ஐயாசாமி ஐயர்
+ குப்பம்மாள்

2. (காப்புக்கட்டி) சின்னையர். 3. தங்கம்மாள்

1. முத்துக்குமாரசாமி ஐயர் (சர்மா)
+ மீனாக்ஷி

2. லக்ஷ்மி (எ) செல்லம்மா 3. தெய்வயானை அம்மா
4. பரமசாமி ஐயர் (சந்தானம் இல்லை)
5. சரஸ்வதி அம்மா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்—



Printed By: Harikanan Printers Jaffna, T.P:021-222 2717,4590123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org